செ.வெ.எண்:13 நாள்:06.02.2019

**தோட்டக்கலை துறை மூலம் தொழில் பழகுனர் பயிற்சி பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

இந்திய விவசாயத்தில் தோட்டக்கலைப் பிரிவு முக்கிய மற்றும் துடிப்பான ஒரு அங்கமாக உள்ளது. தோட்டக்கலைத்துறை விவசாயிகளின் உற்பத்தியினை இரு மடங்காக்கி வருமானத்தை மும்மடங்காக உயர்த்தும் முக்கிய நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றது.

தொழில் பழகுனர் பயிற்சி அளிப்பதன் மூலம் சந்தையில் வேலை வாய்ப்பு அளிப்பவர்களுக்கும் திறன் மிக்க மாணவர்களுக்கும் உள்ள இடைவெளியினை பூர்த்தி செய்யவும் விவசாயிகளுக்கும் தொழில் நுட்பத்திற்கும் இடையே இணைப்பு பாலமாக விவசாயிகளுக்கு உதவும் வகையில் 500 தொழில் பழகுனர்களுக்கு தோட்டக்கலைத்துறையில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

தோட்டக்கலைத்துறையில் தொழில் பழகுனர் பயிற்சி வேலையில்லா படித்த இளைஞர்களுக்கு அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கான மாற்று வழிகாட்டியாக திகழ்வதுடன், இளைஞர்களின் திறமையை வெளி கொணர்வதோடு ஒரு பணியினை தன்னம்பிக்கையுடன் மேற்கொள்ள உதவுகிறது.

கார்டனர் பயிற்சிக்கு குறைந்த கல்வித்தகுதியாக 10th அல்லது 12th தோட்டக்கலையில் டிப்ளமோ இருத்தல் வேண்டும். Draughtsman Civil, எலக்ட்ரிசியன், பிளம்பர், பிட்டர் மற்றும் கார்டனர் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தகுதி தொகுப்பில் உள்ள குறுகிய கால திறன்களில் பயிற்சி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

தொழில் பழகுனர் பயிற்சியின் மூலம் மத்திய அரசின் நிதி உதவியுடன் ஒரு வருட காலம் பயிற்சி பெற்ற தொழில்நுட்ப தகுதியுடைய மற்றும் முன் அனுபவம் இல்லாத இளைஞர்களுக்கு பல்வேறு திட்டங்களில் பணி பெறுவதற்கான வாய்ப்பளிக்கப்படுகிறது. ஓராண்டு பயிற்சி முடித்த பின் தொழில் முனைவோர் பயிற்சி மையத்தினர் நடத்தும் ஆன்லைன் தேர்வில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்றபின் சான்றிதல் வழங்கப்படும். இச்சான்றுகள் மாநில, மத்திய மற்றும் அயல் நாடுகளில் பணிபுரிய வாய்ப்பளிக்கிறது. இப்பயிற்சியில் ஓராண்டிற்கு 500 தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாதம் ரூ.7000/– உதவித்தொகையாக வழங்கப்படும்.

எனவே தொழில் பழகுனர் பயிற்சியில் ஈடுபட ஆர்வமுள்ள கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் tnhorticulture.tn.gov.in என்ற இணையதளத்தில் உள்ள விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து ddhkarur@yahoo.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி பயன் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர், கரூர்.